சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No.67/2022

| | |
|---|---|
| பெயர் | : பாண்டி |
| தகப்பனார் பெயர் | :வெள்ளைச்சாமி |
| கணவர் பெயர் | : |
| வயது | :60 |
| கிராமம் | :கருத்தபுலியம்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | : கூலி வேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

17.03.2025

வா.சா.3 முதல் விசாரணை:

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது, அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி அழகர் என் ஊரைச்சார்ந்தவர். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். வழக்கு சொத்து 7 லட்சத்திற்கு சௌந்திர பாண்டியன், அழகருக்கு கிரையம் பேசினார். முன்தொகையாக 5 லட்சம் ரூபாயை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் அழகர், சௌந்திரபாண்டியனிடம் கொடுத்துள்ளார். 1 – ½ ஆண்டுகள் காலகெடுவிற்குள் மீத கிரைய தொகை 2 லட்சம் ரூபாயை செலுத்துவதாக பேசப்பட்டது. 6 மாத காலத்திற்குள் அழகர், பதிந்து கொள்வதற்காக சௌந்தரிடம் கேட்ட போது அவர் வர மறுத்துவிட்டார். மீதகிரைய தொகையை கொடுத்து கிரையம் முடித்து கொடுக்க கேட்கப்பட்டதா என்றால் தயாராக இருந்தோம். அழைத்த போது பிரதிவாதி வரவில்லை. பிரதிவாதி தன்னுடைய மகள் திருமணம் வைத்திருப்பதாகவும், அதனால்இடம் தனக்கு திரும்ப வேண்டுமென்றும் வாங்கிய பணத்தை செலுத்த தயாராக இருப்பதாகவும் கூறிவிட்டார். 5

லட்சம் ரூபாயை திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் அழகரிடமே கொடுத்துவிடுவதாக சௌந்திரபாண்டியன் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் பத்திர அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்த்தேனி. சார்பதிவாளர் முன்னிலையில் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. நான் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் போட்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது பற்றி யாரிடமாவது கேட்டேனா என்றால் எனக்கு கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்பதால் கேட்கவில்லை. எனக்கு முன்பாக ரவி என்ற நபர் கையெழுத்து செய்தார் அதை தொடர்ந்து நான் கையெழுத்திட்டேன். வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் சௌந்தர் தான் தயாரிப்பதாக சொன்னார். எனக்கு தெரியவில்லை. அழகர் மற்றும் சௌந்திரபாண்டியன் ஆகியோர் எப்போது கையெழுத்து போட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் சாட்சியாக தான் சென்றிருந்தேன். 5 லட்சம் ரூபாய் கிரையத்திற்காக முன்தொகையாக கொடுககப்பட்ட தொகை அல்ல என்றும், பிரதிவாதி சௌந்திர பாண்டியன் வாதி அழகரிடம் கடனுக்காக தான் 5 லட்சம் ரூபாய் பெற்றுகொண்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பணம் கொடுக்கல்,வாங்கல் வாதி பிரதிவாதிக்கிடையே நடந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி 3 லட்சம் ரூபாய் கடனாக வாதியிடம் கேட்டதாகவும், அதற்கு தான் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றும், ஆகவே 5 லட்சம் ரூபாய் பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதுபற்றி தெரியாது. 5 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டது பற்றி தான் எனக்கு தெரியும். பத்திரம் எழுதும் இடத்தில் வைத்து 5 லட்சம் ரூபாயை அழகர் சௌந்தரிடம் கொடுத்த போது நான் உடன் இருந்தேன். பணம் கொடுக்கல், வாங்கல் பற்றி வாதி

பிரிதிவாதிகளுக்கிடையே என்ன நடந்தது என்று தெரியாது என்று முன்பு கூறிவிட்டு தற்போது 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதாக கூறி வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடையமகளுக்கு திருமணம் வைத்திருப்பதாகவும், அதனால் இடத்தை கிரையம் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டதாகவும் வேண்டுமென்றால் 5 லட்சம் ரூபாய் திருப்பி வாதியிடமே கொடுத்துவிடுவதாக குறிப்பிட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.03.17 18:55:18 +0530

**Sub Judge**
**Melur**